**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101951

1. District / மாவட்டம் : திண்டுக்கல் PS / காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு Year / ஆண்டு : 2023 FIR No. / மு.த.அ. எண் : 04/23 Date / நாள் : 30.08.23

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 26.08.23 at 12.00 hrs, 28.08.23 at 18.00 hrs, 29.08.23 at 12.00 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.08.23 Time : நேரம் 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.08.23 Time : நேரம் 08.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 KM தென்கிழக்கே
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம், அடியனூத்து கிராமம், திண்டுக்கல்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. கோமநாகராஜ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முருகன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28/23 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — (g) Address : முகவரி கதவு எண் 4/180, விநாயகர் நகர், 3-வது தெரு, சீலையநூர், சீலப்பாடி கிராமம், திண்டுக்கல்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   A1 - திரு. P. முருகானந்தம், கிராம நிர்வாக அலுவலர், அடியனூத்து கிராமம், திண்டுக்கல்.
   A2 - திரு. செந்தில், கிராம உதவியாளர், அடியனூத்து கிராமம் திண்டுக்கல்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30/08/2023 30/08/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.08.23 at 10.20 hrs

Name: பெயர் ஜெ. ஜோபா ஜோராணி,
Rank: நிலை ....................No. எண் .........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
திண்டுக்கல்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:4/2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

**Column No.12, FIR Contents**

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 30.08.2023-ம் தேதி காலை 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திரு.M.கோபிநாகராஜ், த/பெ முருகன், கதவு எண். 4/180, விநாயகர் நகர், 3ம் தெரு, சாலையூர், சீலப்பாடி கிராமம், திண்டுக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 30.08.2023-ம் தேதி காலை 08.30 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: M.கோபிநாகராஜ், த/பெ முருகன், கதவு எண்.4/180, விநாயகர் நகர், 3வது தெரு, சாலையூர், சீலப்பாடி கிராமம், திண்டுக்கல் மாவட்டம், பெறுநர்: உயர்திரு DSP அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகின்றேன். நான் Marine Engineering படித்துள்ளேன். எனது தந்தை வ.முருகன் சீர்காழியில் LIC ல் உதவி நிர்வாக அலுவலராக (AAO) பணிபுரிந்து வருகிறார். எனது தந்தை வழி தாத்தா திரு.வரதராஜ் அவர்கள் பாட்டி திருமதி.அன்னலெட்சுமியுடன் தோமையார்புரத்தில் குடியிருந்து வந்தவர் உடல்நிலை சரியில்லாமல் கடந்த 13.06.2023ம் தேதி எங்கள் வீட்டில் இறந்துவிட்டார். அதன் பிறகு என்னுடைய பாட்டி திருமதி.அன்னலெட்சுமி தற்சமயம் எங்களுடன் வசித்து வருகின்றார். எனது தந்தைக்கு உடன் பிறந்தவர்கள் திருமதி.சீனியம்மாள் மற்றும் திருமதி.சந்திரலேகா ஆவார்கள். எனது தாத்தா இறந்ததற்கான இறப்பு சான்றிதழை கடந்த 10.07.2023ம் தேதி சீலப்பாடி VAO அலுவலகத்திலிருந்து பெற்றேன். பின்பு வாரிசு சான்றிதழ் பெறுவதற்காக எனது பாட்டி திருமதி.அன்னலெட்சுமி பெயரில் விண்ணப்பிக்குமாறு எனது அப்பா என்னிடம் கூறினார். அதனால் நான் எனது தாத்தாவின் வாரிசு சான்றிதழ் வேண்டி எனது அப்பா கூறியபடி பாட்டி திருமதி.அன்னலெட்சுமி பெயரில் திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகத்தில் உள்ள E-Sevai மையத்தில் கடந்த 27.07.2023ம் தேதி ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பதுடன் எனது பாட்டி, அப்பா மற்றும் அத்தைகளின் ஆதார் கார்டுகள், குடும்ப அட்டைகள் மற்றும் எனது தாத்தாவின் இறப்பு சான்றிதழ் ஆகியவற்றை ஆன் லைன் விண்ணபத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்தேன். அப்போது எனது

அப்பாவின் அலைபேசி எண். 8883289740 மற்றும் என்னுடைய அலைபேசி எண். 8356938976 ஆகிவற்றை பதிவேற்றம் செய்தேன். கடந்த 26.08.2023ம் தேதி எனது அப்பா என்னை அலைபேசியில் தொடர்பு கொண்டு 8778754771 என்ற அலைபேசி எண்ணிலிருந்து வாரிசு சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்தது சம்மந்தமாக அழைப்பு வந்ததாகவும், அழைத்த நபர் அடியனூத்து கிராம நிர்வாக அலுவலத்திலிருந்து பேசியதாகவும், அந்த நம்பரில் என்னை அழைத்து விபரம் கேட்டுக்கொள்ளுமாறு கூறினார். அதனால் நான் அந்த நம்பரில் காலை சுமார் 11.37 மணிக்கு அழைத்து பேசினேன். அப்போது பேசிய நபர் தான் VAO அலுவலகத்திலிருந்து பேசுவதாகவும், எனது தாத்தா அவர்களின் வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக பேசுவதற்காக திண்டுக்கல் ரயில்வே ஜங்சன் அருகே வருமாறு கூறினார். நான் திண்டுக்கல் ரயில்வே ஜங்சன் சென்று சுமார் 11.54 மணிக்கு அந்த தொலைபேசியில் பேசினேன். அப்போது அந்த நபர் ஸ்ரீமங்களம் டவர்ஸ் அபார்ட்மெண்ட்டுக்கு அருகில் வந்து சந்திக்குமாறு கூறினார். நான் அங்கு சென்று அவரை சந்தித்தபோது, அவர் வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக என்னிடம் பேசினார். மேலும் வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு ரூ.2,000/-ம் வரை செலவாகும் என்று கூறினார். இந்த பணம் உங்களுக்கு கொடுக்க வேண்டுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் இந்த பணம் VAOவிற்கு கொடுக்க வேண்டிய பணம் என்று சொன்னார். நான் பின்பு வீட்டிற்கு வந்துவிட்டேன். பணம் கேட்ட நபர் அடியனூத்து VAO அலுவலகத்தில் இருந்து தான் வந்திருந்தாரா என்று சந்தேகம் ஏற்பட்டதால், 28.08.2023ம் தேதி மாலை சுமார் 6 மணிக்கு அடியனூத்து VAO அலுவலகம் சென்று, VAO அவர்களை நேரில் சந்தித்தேன். அப்போது VAOவிடம் தங்களது அலுவலகத்திலிருந்து சனிக்கிழமை ஒரு நபர் பேசினார் என்றும், வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு ரூ.2,000/- வரை செலவாகும் என்று சொன்னதாகவும் நான் VAOவிடம் கூறினேன். அதற்கு VAO ஆமாம் எங்கள் அலுவலகத்திலிருந்து செந்தில் என்பவர் பேசியிருப்பார், அவர் கிராம உதவியாளர் என்றும் நான் சொன்னதால் தான் அவர் உங்களிடம் பேசியிருப்பார் என்றும் சொன்னார். பின்பு என்னிடம் விபரங்களை கேட்டுவிட்டு, ரூ.2,000/-த்தை நாளை 29.08.2023 காலை அலுவலகத்தில் கொண்டு வந்து கொடுக்குமாறு கூறினார். நான் இந்தப்பணம் அரசுக்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் உங்களுக்கு வாரிசு சான்று கிடைக்க எனது பரிந்துரையினை வழங்கி ஏற்பாடு செய்வதற்கு எனக்கு கொடுக்க வேண்டிய பணம்

என்று சொன்னார். நான் அலுவலகத்திலிருந்து வெளியே வந்து அங்கு இருந்தவர்களிடம் கேட்டு VAO பெயர் திரு.முருகானந்தம் என தெரிந்துகொண்டேன். என்னால் பணத்தை ரெடி பண்ண முடியாததால் VAO வை நேரில் சந்தித்து கொஞ்சம் குறைத்து கேட்கலாம் என்று எண்ணி நேற்று 29.08.2023ம் தேதி காலை சுமார் 12 மணிக்கு VAO அலுவலகம் சென்றேன். அங்கு VAO திரு.முருகானந்தம் மற்றும் கிராம உதவியாளர் திரு.செந்தில் ஆகியோர் இருந்தனர். அப்போது திரு.செந்தில் என்னிடம் பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். 28.08.2023ம் தேதி அலுவலகம் வந்து VAO அவர்களிடம் பேசினேன், அப்போது நீங்கள் சொன்ன மாதிரி பணத்தை கொண்டு வருமாறு கூறினார். நான் VAOவை நேரில் சந்தித்து கொஞ்சம் குறைத்து கொள்ளுமாறு கேட்பதற்கு வந்தேன் என்று சொன்னவுடன், திரு.செந்தில் என்னை VAOவிடம் அழைத்து சென்றார். அப்போது VAO நான் கேட்ட பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா எனக் கேட்டார். நான் அவரிடம் பணம் கொண்டு வரவில்லை, மிகவும் சிரமத்தில் இருப்பதால் கொஞ்சம் குறைத்து கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் நானே குறைவாகத்தான் கேட்டுள்ளேன், இந்த பணத்தை கொடுத்தால்தான் பரிந்துரை செய்து அனுப்புவேன் என்று கறாராகக் கூறினார். மேலும் இந்த பணம் ரூ2.000/-த்தை நாளை 30.08.2023ம் தேதி காலை அலுவலகத்தில் வந்து என்னிடம் கொடுங்கள் என்று கூறினார். பின்பு வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் லஞ்சப்பணம் ரூ.2,000/-ம் கொடுத்து எனது தாத்தாவின் வாரிசு சான்றிதழ் பெற எனக்கு விருப்பமில்லாததால், என்னிடம் லஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அலுவலர் திரு.முருகானந்தம் மற்றும் கிராம உதவியாளர் திரு.செந்தில் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், VAO திரு.முருகானந்தம் மற்றும் கிராம உதவியாளர் திரு.செந்தில் ஆகியோர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.2,000/-ஐ கொண்டுவந்துள்ளேன். இந்த புகாருடன் எனது தாத்தாவின் இறப்பு சான்றிதழ் மற்றும் ஆன்லைன் விண்ணப்பத்தின் Check Status நகல் ஆகியவற்றின் நகலினை இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (M.கோபிநாகராஜ், 30.08.2023)

Sir, Received the complaint on 30.08.2023 at 07.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be

bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.04/2023 u/s 7(a) of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 30.08.2023 at 08.30 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 30.08.2023)

Original FIR along with the complaint of M.Gopinagaraj, S/o.Murugan, Door No.4/180, Vinayagar Nagar, 3rd Street, Salaiyur, Seelapadi Village, Dindigul District and with the relevant documents are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

JRupa 30/08/23

(J.Rupa Geetharani)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.